# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No.108/2004

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 30.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : கருப்பண்ண கவுண்டர் Father's Name : பெரியண்ண கவுண்டர்

துவக்க நேரம் : 12.35P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. நான் பொதுவாக எனக்கு சம்மந்தப்பட்ட பத்திரத்தில் மட்டும்தான் கையொப்பம் செய்வேன் என்றாலும், பொய்யான ஆவணங்களில் கையொப்பமிடமாட்டேன் என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் 3-ஆம் பத்தியில் கிரய ஒப்பந்த ஆவணமானது குதவை பத்திரத்திற்கு ஆதாரத்திற்காக எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையானவைகள் என்றால் சரிதான். எனது வழக்குரையில் வாதிக்கு கிரய ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் இல்லை.

2. எனது பதிரையில் கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்ற நான் மறுக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. தாவா சொத்தை நான் இரண்டு கிரய ஆவணங்கள் மூலம் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய பொழுது தாவா சொத்தின் இரண்டு கிரய ஆவணங்களை ஒப்படைத்துள்ளேன் என்றால்

சரிதான். தற்பொழுது கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்பதை நிரூபணம் செய்ய தடய அறிவியல் துறை சென்னைக்கு ஒப்பந்த பத்திரத்தை அனுப்ப வேண்டி தாக்கல் செய்த மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் பேரில் சென்னை, மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. இவ்வழக்கானது கடந்த 2004-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு 21 ஆண்டுகளாக வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகிறேன் என்றால் சரியல்ல, என்னால் கால தாமதம் ஏற்படவில்லை. மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தில் சதாசிவபுரம் கிராம ஊராட்சி மன்ற தலைவர் பெருமாள் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பெருமாளுக்கும், எனக்கும் எந்தவித விரோதமும் இல்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் தாவா சொத்தை விற்பனை செய்ய கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றாலும், தாவாப்படி வாதிக்கு தீர்ப்பாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 12.47P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.108/2004, Dt.30.01.2026.